தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1973 நவம்பர் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Dr. Kalaignar Karunanidhi College Building, Salem

* 391 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether the scheme for the acquisition of site and construction of a building thereon for the Karunanidhi College at Salem, has been finalised ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) கல்லூரிக் குழு அரசுக்குச் சொந்தமான சுமார் 14.17 எக்கர் நிலத்தை, கல்லூரிக்காகப் பெற்றுள்ளது. இந்த நிலத்தில் ரூ. 4.26 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கல்லூரிக் குழு நிலையான கட்டிடம் கட்டியுள்ளது.

Lecturers in Telugu for Government Arts College, Nandanam

* 392 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether a large number of Telugu students are studying at the Nandanam Government Arts College, Madras ; and

(*b*) the steps taken to provide Telugu lecturers for them ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் 23 மாணவர்கள் மட்டும் தெலுங்கை முதல் பாடமாக எடுத்துப் படிக்கின்றனர்.

(இ) அண்ணாசாலையில் இருக்கும் அரசு கலைக்கல்லூரியின் தெலுங்கு உதவிப் பேராசிரியரை நந்தனம் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு தெலுங்குப் பாடம் போதிக்கும்படி கல்லூரிக் கல்வி இயக்குநர் ஏற்பாடு செய்துள்ளார்.

THIRU N. DENNIS: May I know, from the Hon. Minister for Education what safeguards the Government have given to enable the linguistic minorities to study their language and also to study the subjects in their own languages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சிறுபான்மையோருக்கான எல்லா வசதிகளையும் இந்த அரசு செய்து தந்து வருகிறது. போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பார்களானால், அதற்குத் தகுந்தாற்போன்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட அரசு கவனம் செலுத்திவருகிறது. நம்முடைய கல்லூரியில், புகுமுக வகுப்பில் 10 பேரும், முதல் பி.ஏ., பி.எஸ்சி. வகுப்புகளில் 5 பேரும், இரண்டாவது பி.ஏ. வகுப்பில் 8 பேரும் தெலுங்கு பயிலுகிறார்கள். இதற்குப் பல்கலைக் கழகம் அனுமதி தரவில்லை யென்றாலும், மாணவர்களுடைய கல்வி நலன் கருதி அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரியில் பணியாற்றி வருகின்ற தெலுங்கு உதவிப் பேராசிரியரை இந்தக் கலைக் கல்லூரிக்கும் பயன்படுத்தும் அளவுக்கு அவர்கள் பயன் பெறட்டும் என்று நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரியில் இருக்கும் தெலுங்கு உதவிப் பேராசிரியரை நந்தனம் கலைக் கல்லூரிக்குப் பகுதி நேர ஆசிரியராக வந்து பாடம் கற்பிக்கச் சொல்வதால் மாணவர்கள் சரியான முறையில் பாடங்கள் கற்க முடியவில்லை; ஆகவே, தனியாக உதவிப் பேராசிரியரை நியமிக்க வேண்டும் என்று மாணவர்கள் அங்கே முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். தெலுங்கு மொழி படித்துத் தேர்வு பெற்றவர்கள் வேலை கோரி நமது அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் அனுமதிக்கவில்லை என்றால், நம்முடைய அரசு 23 மாணவர்களுடைய நலனைக் கருதி தனியாக உதவிப் பேராசிரியரை நியமிக்க இனியாவது ஏற்பாடு செய்யுமா?

1975 நவம்பர் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாணவர்கள்மீது பரிவினை கொண்டிருப்பதன் காரணமாகத் தான் ஐந்து மாணவர்கள் இருந்தாலும் அவர்களுக்காக ஒரு தெலுங்கு ஆசிரியரை அனுப்பலாமென்ற முறையை மேற்கொண்டிருக்கிறது. குறைந்தது பத்துப் பதினைந்து பேராவது உயர்நிலைப்பள்ளியில் இருக்கவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறோம். கல்லூரியைப் பொறுத்து, 20—25 பேராவது இருக்கவேண்டும். ஆனால், ஐந்தே பேராக இருந்தாலும், அவர்களுடைய நலனும் கெடக்கூடாது என்ற காரணத்தால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாணவர்களிடத்திலிருந்து குறைபாடு எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரியில் தெலுங்கு போன்ற மற்ற மைனாரிட்டி மொழியாகிய உருதுவுக்கு முன்பு தனி ஆசிரியர்கள் இருந்தார்கள் அவர்கள் இப்பொழுது இருக்கிறார்களா? அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரியை இப்பொழுது பெண்கள் கல்லூரியாக மாற்றும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அப்படியென்றால், அதை அவ்வாறு மாற்றாமல், இப்பொழுதுள்ளதுபோலவே ஆண்கள் கல்லூரியாகவே இருக்கவேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, நந்தனத்திலுள்ள அரசுக் கலைக்கல்லூரியைப் பற்றியது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரியில் இப்பொழுது தெலுங்குத் துணைப் பேராசிரியர் இருந்து வருகிறார். அங்கிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இரண்டு கல்லூரிகளையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவர்களிடத்தில் விடப்பட்டிருக்கிறது. புகுமுக வகுப்பும் 1—2-வது பட்டப் படிப்புகளும் நந்தனம் கலைக் கல்லூரிக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. கடைசி ஆண்டு மட்டும்தான் இருக்கிறது. மற்றபடி அங்கிருக்கும் யாருக்கும் எந்தக் குறைபாடும் ஏற்படாத வகையில் தக்க முடிவை அரசு மேற்கொள்ளும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரியிலிருக்கும் தெலுங்குப் பேராசிரியர் நந்தனம் கல்லூரிக்குச் செல்வதற்காக அவருக்கு ஏதாவது பயணப்

படி தரப்படுகிறதா ? அல்லது, கூடுதல் சம்பளம் ஏதாவது வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. அதையெல்லாம் முறைப்படி அவர்கள் கேட்பார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். அதையெல்லாம் நிறைவேற்றுகிற நிலைமையில்தான் இந்த ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும். தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்படி பட்ட அண்ணா சாலையில் ஒரு கல்லூரியும் நந்தனத்தில் ஒரு கல்லூரியும் இருப்பதைவிட நந்தனத்திலே பெரிய இடமாக இருப்பதால் அங்கேயே இதையும் ஷிஃப்ட் செய்துவிட்டு, அண்ணா சாலையில் கலைக் கல்லூரி இருக்கும் இடத்தில் பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரியொன்றை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலேயே சொன்னேன். அண்ணா சாலையிலுள்ள கல்லூரியிருக்கும் புகுமுக வகுப்பு, பட்டப் படிப்பு, முதல் இரண்டாவது வகுப்பு மாணவர்கள் நந்தனம் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவது வகுப்பு மாணவர்கள் மட்டும் அங்கேயே பயின்றுவருகிறார்கள். அதற்குப் பிறகு அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சர்க்கார் சரியான முறையில், எந்தக் கேடும் ஏற்படாமல், எல்லாருடைய நலன்களையும் பாதுகாக்கும் வகையில் தக்க முடிவுகளை தக்க நேரத்தில் எடுக்கும்.

Archaeological Survey at Korkai

* 393 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether the State Archaeological Department have undertaken any survey of the Korkai area in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?